Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 24/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | பால்சாமி | தொழில் | : | விவசயாம் |
| கிராமம் | : | T.கோம்பை | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2026.

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் T.கோம்பையில் குடியிருந்துகொண்டு விவசயாம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவர். கடந்த 26.05.2020 அன்று (26.02.2020 என்று சாட்சி தேதியை தன் கையில் எழுதி வைத்து சாட்சியம் அளிக்கிறார்) காலை 06.45 மணிக்கு எங்கள் ஊரில் உள்ள ஜெயராம் டீக்கடையில் நான் டீ குடித்துக்கொண்டிருந்தபோது, என் மனைவி ஜெயா மற்றும் கர்ணன் ஆகியோர் சத்தம் கேட்டு நான் என் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, என் மாமியார் வீட்டில் என் மனைவி தினசரி வாசல் தெளிப்பது வழக்கம். அவ்வாறு வாசல் தெளிக்கும் போது கர்ணன் என்பவர் ஏன் இங்கு வந்து வாசல் தெளிக்கிறாய் என்றும், நான் சாராயம் விற்பதை உன் கணவர் கன்னிவாடி போலிசாரிடம் தொடர்ந்து சொல்லிவருவதாக சொல்லி, என் மனைவியிடம் சொல்லிக்கொண்டிருந்தார். நான் அங்கு சென்றவுடன் என்னை எதிரி கணேசன் கீழே தள்ளி, கர்ணன் என்பவர் தடியை எடுத்து வலது காதிலும், இடது கால் முட்டியிலும் அடித்தார். அவர் அடித்ததனால் எனது காது மற்றும் காலில் ரத்தம் வந்தது. பிச்சையம்மாள் என்பவர் என் மீது கல்லை தூக்கி எறிந்தார், நான் ஒதுங்கிக்கொண்டேன். ஞானமணி என்பவர் அருகிலிருந்து விலக்கிவிட்டார். மற்ற சாட்சிகள் யாரும் அந்த இடத்தில் இல்லை. ஞானமணியும், அவரது குடும்பத்தார்கள் மட்டும் தான் இருந்தார்கள்.

சம்பவ இடத்திலிருந்து எனது உறவினர்கள் பேருந்தில் எனக்கு சிகிச்சை அளிப்பதற்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு 6 நாட்கள் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தை நான் சொன்னதன் பேரில் மருத்துவமனையில் அருகில் இருந்த நபர் எழுதினார். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்துடன்

கூடிய புகார் வாக்குமூலம் **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுக்கும் உங்கள் மகனுக்கும் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நீங்கள் மருத்துவமனையில் இருந்த போது உங்களது புகாரை யார் எழுதியது என்றால் அருகில் சிகிச்சையில் இருந்த நபர் எழுதினார். அவர் புகார் வாக்குமூலத்தை எழுதும் போது உங்கள் மகன் அருகில் இல்லை என்றால் சரிதான். அன்று மாலை 4அல்லது 5 மணிக்கு தான் வந்தார். உங்கள் மகன் வருவதற்கு முன்பாகவே இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தில் நீங்கள் கையொப்பம் செய்து விட்டீர்கள், போலீசார் புகார் வாக்குமூலம் பெற்று விட்டு சென்ற பிறகு தான் உங்கள் மகன் வந்தார் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தில் சாட்சிக் கையொப்பம் என்ற இடத்தில் உங்கள் மகன் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்களிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் கர்ணன் மனைவி உங்களை என்ன வார்த்தை சொல்லி திட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் கர்ணனுடைய உடன் பிறந்த தங்கையை தான் திருமணம் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் உங்கள் வீட்டின் முன்பு தான் சண்டை நடந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் வரைபடத்தில் உங்கள் வீடு காட்டப்படவில்லை என்றால் சரிதான். காவல்துறை தான் மேற்படி வரைபடத்தை வரைந்தது. உங்களிடம் காட்டப்படும் வரைபடத்தில் டேமிலிருந்து பன்னப்பட்டி செல்லும் சிமெண்ட் சாலையில் சம்பவம் நடைபெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்தில் யார் சம்பவத்தை நேரில் பார்த்தார்கள் என்றும் யார் விலக்கி விட்டார்கள் என்றும் யார் இருந்தார்கள் என்றும் பெயர் விபரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் யார் உங்களை குச்சியை வைத்து அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன விதமான கட்டை என்று குறிப்பிடப்பட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் வரைபடத்தில் டீக்கடை அருகில் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கன்னிவாடி அரசு மருத்துவமனைக்கு நீங்கள் எந்த வாகனத்தில் யாருடன் சென்றீர்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள போக்குவண்டி என்ன வண்டி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி கர்ணனின் தங்கையை நீங்கள் அவர் குடும்பத்தார் சம்மதமின்றி திருமணம் முடித்துள்ளீர்கள் என்றால் சரிதான் அன்றிலிருந்து எதிரி கர்ணனின் குடும்பத்திற்கும் உங்களுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். எதிரி கர்ணன் சாராயம் விற்பதை நான் போலிசிடம் சொல்லியதால் எங்களுக்குள் பேச்சு வார்த்தை கிடையாது. முதல் விசாரணையில் இடப்பிரச்சனை உள்ளதாக சொல்லியுள்ள இடம் எதிரி கர்ணனின் தாயார் பேரில் உள்ளது என்றால் சரிதான். டீக்கடையில் 4,5 நபர்கள் டீக்குடித்துக்

கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். உண்மையில் சண்டை நடந்திருந்தால் அவர்கள் வந்து சண்டையை விலக்கியிருப்பார்கள் என்றால் சரியல்ல அவர்கள் வரவில்லை. உங்களது மகனின் மீதும் எதிரி கர்ணன் குடும்பத்தார் புகார் கொடுத்து மாண்பு மிகு மாவட்டம் திண்டுக்கல்லில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் இந்த சம்பவத்திற்கு பின்பு கொடுக்கப்பட்ட வழக்ககாகும். உங்களுக்குள் உள்ள இடப்பிரச்சனையை தீர்த்துக் கொள்வதற்கு உரிமையியல் நீதிமன்றத்தை நாடவில்லை என்றால் சரிதான். உங்கள் மனைவி தண்ணீர் தெளித்த இடம் எதிரி கர்ணனின் தாயாருக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல. உங்களை அடித்ததாக சொல்லப்படும் கட்டையின் நீளம், அகலம் மற்றும் எந்த வகை மரத்திலான கட்டை என்பதை நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் உங்களை அடித்திருந்தால் மேற்படி விவரங்களை புகாரில் குறிப்பிட்டு சொல்லியிருப்பீர்கள் என்று கூறினால் சரியல்ல. உங்கள் மகன் தான் எதிரி கர்ணனின் குடும்பத்தாரை அடித்தார் என்றும் அவர்கள் புகார் கொடுத்து விடுவார்கள் என்பதற்காக அதிலிருந்து தப்பித்து கொள்வதற்காக நீங்கள் முதலில் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் உங்களை யார் அடித்தார்கள் என்று பெயர் விபரம் குறிப்பிட்டு சொல்லவிலலை என்றால் சரிதான். மருத்துவமனையில் சம்பவம் 7.00 மணிக்கு மேல் தான் நடந்தது என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் உங்கள் புகார் வாக்குமூலத்தில் சம்பவம் 6.45 மணிக்கு நடைபெற்றதாக கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதி உள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியாது அதனால் யார் கையெழுத்து செய்தார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. உங்களது முதல் விசாரணையில் எதிரி கர்ணன் மனைவி கல்லை தூக்கி தலையில் போட வந்தார் என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான் ஆனால் புகார் வாக்குமூலத்தில் கல்லை எடுத்து எறிந்தார் என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்திருந்தால் நீங்கள் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை கூற மாட்டீர்கள் என்றால் சரியல்ல. எதிரி உங்களை அசிங்கமாக பேசிவில்லை, அடிக்கவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor